بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *18/04/2025* அன்று *U.K -* இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

✪ ஹிஜ்ரீ 7 மற்றும் 8 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த போர்கள், போர் நடவடிக்கைகள் ஆகியவற்றின் பின்னனியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்பு

✪ பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காக துஆக்களுக்கான கவனமூட்டல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۬ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக இன்று சில போர் நடவடிக்கைகள் குறித்தும், அன்னார் அனுப்பி வைத்து சில போர்ப் படைகள் குறித்தும் எடுத்துக் கூறுவேன். **துர்பா எனுமிடத்தை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் போர்ப்படை குறித்து வரலாற்றில் குறிப்பு காணப்படுகிறது.** இந்த போர் நடவடிக்கை ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை ஹவாஸின் கோத்திரத்தை நோக்கி துர்பா எனுமிடத்திற்கு 30 நபர்களுடன் அனுப்பி வைத்தார்கள். இந்த போர்ப் படையை அனுப்பி வைத்ததற்கான காரணம் என்னவென்றால், துர்பாவாசிகள் சார்பாக இஸ்லாத்திற்கெதிராக சூழ்ச்சி செய்வதாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புறப்பட்டார்கள். துர்பாவாசிகளுக்கு இந்த செய்தி கிடைத்தபோது அவர்கள் அங்கிருந்து ஓடி விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அம்மக்களின் பகுதியை சென்றடைந்தபோது அங்கு யாரும் இருக்கவில்லை. துர்பாவாசிகளுடைய எல்லா செல்வமும், கால்நடைகளும் அங்கு இருந்தன. அம்மக்கள் விஷமத்தனம் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். ஆகவே, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த அனைத்து செல்வத்தையும் கைப்பற்றிக் கொண்டு திரும்ப புறப்பட்டார்கள்.

**பிறகு, இன்னொரு போர்ப் படையை பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது. அது, பனூ முர்ரா எனும் கோத்திரத்தை நோக்கி ஃபதக் எனுமிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களின் போர்ப் படை ஆகும்.** இந்த போர் நடவடிக்கை ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. இந்த போர் நடவடிக்கைக்கான விபரம் இவ்வாறு வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களை 30 சஹாபிகளுடன் ஃபதக் எனுமிடத்தில் இருக்கும் பனூ முர்ராவை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

**இங்கு இன்னொரு விஷயத்தையும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அது என்னவென்றால்,** இஸ்லாத்திற்கு எதிராக சூழ்ச்சிகள் தீட்டப்படுகின்றது என்று (சில) மக்களை குறித்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைக்கும்போதுதான் அன்னார் இந்த போர் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் அல்லது போருக்காக போர்ப் படைகளை அனுப்பி வைப்பார்கள்.

எவ்வாறிருப்பினும், சஹாபிகள் புறப்பட்டார்கள். ஆட்டிடையர்களை சந்தித்தபோது அவர்களிடம் பனூ முர்ராவைக் குறித்து விசாரித்தார்கள். பனூ முர்ரா தம் பள்ளத்தாக்கில்

இருக்கிறார்கள்; அவர்கள் நீரூற்றுக்கு வரவில்லை என்று அந்த ஆட்டிடையர்கள் கூறினார்கள். சஹாபிகள் அவர்களுடைய ஆடுகளை ஓட்டிக்கொண்டு மதீனாவை நோக்கி திரும்ப புறப்பட்டார்கள். அப்போது பனூ முர்ராவைச் சார்ந்த ஒருவர் இச்சம்பவத்தை குறித்து உரத்த குரலில் அறிவித்தார். ஆகவே, பனூ முர்ராவைச் சார்ந்த மக்கள் புறப்பட்டு வந்து முஸ்லிம்கள் மீது மிகப்பெரிய படையைக் கொண்டு தாக்குதல் நடத்தினார்கள். முழு இரவும் முஸ்லிம்கள் அம்பெய்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால், சஹாபிகளிடம் இருந்த அம்புகள் (அனைத்தும்) முடிந்துவிட்டன. முஸ்லிம்கள் காலை விடியலைக் கண்டபோது பனூ முர்ராவைச் சார்ந்தவர்கள் மறுபடியும் தாக்குதல் நடத்தினார்கள். ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களுடைய தோழர்களை ஷஹீதாக்கினார்கள். ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அம்மக்களுடன் கடுமையாக போரிட்டுக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் காயமடைந்து விழுந்து விட்டார்கள். அவர்களின் கணுக்காலில் காயம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் இறந்து விட்டார்கள் என்று எதிரிகள் கருதிக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் உயிருடன் இருந்தார்கள். பிறகு, பனூ முர்ராவைச் சார்ந்த மக்கள் தம் ஆடுகளை திரும்ப ஒட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள்.

**பிறகு, மீஃபியாவை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் காலிப் பின் அப்துல்லாஹ் லைஸீ (ரலி) அவர்களின் போர்ப்படை பற்றிய குறிப்பு காணக்கிடைக்கிறது.** இந்த போர் நடவடிக்கை ரமலான் மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு நிகழ்ந்தது. இப்னு சஅது அவர்கள் எழுதுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலிப் பின் அப்துல்லாஹ் லைஸீ (ரலி) அவர்களை பனூ அவால் மற்றும் பனு அப்த் பின் சஅலபாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அம்மக்கள் மீஃபியா எனுமிடத்தில் இருந்தார்கள். அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக எதிர்மறை பிரச்சாரம் செய்து வந்தார்கள். அகழ் போரைப் போன்று ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக மக்களை ஒன்று திரட்ட ஆரம்பித்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலிப் பின் அப்துல்லாஹ் லைஸீ (ரலி) அவர்களை 130 சஹாபிகளுடன் அனுப்பி வைத்தார்கள். அன்னாரால் விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமையான ஹஸ்ரத் யஸார் (ரலி) அவர்கள் இப்படைக்கு வழிகாட்டியாக இருந்தார்கள். முஸ்லிம்கள் அவர்கள் மீது ஒரேடியாக தாக்குதல் நடத்தி அவர்களுடைய குடியிருப்பின் மையப்பகுதி வரை சென்றடைந்தார்கள். எவர்களெல்லாம் போரிட முன் வந்தார்களோ அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டார்கள். போர்ச் செல்வத்தில் ஆடுகளும், செம்மறி ஆடுகளும் கிடைத்தன. அவை மதீனாவுக்கு கொண்டுவரப்பட்டன. எவரையும் சிறை பிடிக்கவில்லை.

இப்னு சஅது எழுதுகிறார்கள்: இந்த போரில்தான் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் மிர்தாஸ் பின் நஹீக் என்பவரை கொலை செய்தார்கள். அவர் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறியிருந்தார். புகாரியில் இச்சம்பவத்தின் விபரம் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களின் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அந்த செய்தி சென்றடைந்தபோது அன்னார் என்னிடம், உஸாமாவே! அவர் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறிய பிறகும் நீர் அவரை கொன்று விட்டீரா என்று கேட்டார்கள். அதற்கு நான், அவர் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காகவே அவ்வாறு கூறினார் என்றேன். ஆனால், அன்னார் தொடர்ச்சியாக அதை கேட்டுக்கொண்டே இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால், நான் அந்த நாளுக்கு முன்பு முஸ்லிமாக ஆகாதிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்க ஆரம்பித்தேன்.

முஸ்லிம் இந்த அறிவிப்பை இவ்வாறு எடுத்துரைக்கிறது: அவர் உளப்பூர்வமாக அவ்விஷயத்தை கூறினாரா இல்லையா என்பதை தெரிந்து கொள்ள நீர் அவரது உள்ளத்தை ஏன் பிளந்து பார்க்கவில்லை என்று அன்னார் கேட்டார்கள்.

**இன்றைய காலத்து மவ்லவிகள் அஹ்மதிகளின் உள்ளங்களை பிளந்து பார்த்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அஹ்மதிகளை ஷஹீதாக்குவது, அஹ்மதிகள் மீது அநீதி செய்வது ஆகியவை ஆகுமானது என்று கருதுகிறார்கள். அல்லாஹ் இவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டையும் செய்வானாக!**

இன்னோர் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் மிர்தாஸுடைய குடும்பத்தாரிடம் அவருக்கான இழப்பீட்டை கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். மேலும், அவருடைய செல்வத்தையும் அவர்களிடம் திரும்ப கொடுத்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: இந்த போரின் சம்பவங்களை பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறுவதற்காக ஒரு காட்டரபி மதீனாவுக்கு சென்றார். அவர் போரின் அனைத்து சூழ்நிலைகளையும் எடுத்துரைக்கும்போது இந்த சம்பவத்தையும் எடுத்துக் கூறினார். ஆகவே, அன்னார் உஸாமாவை வரவழைத்தார்கள். நீர் அந்த மனிதனை கொன்று விட்டீரா என்று கேட்டார்கள். அவர், ஆம் என்று கூறினார். கியாமத் நாளன்று லாயிலாஹ இல்லல்லாஹ் உமக்கு எதிராக சாட்சி கூறுமே! நீர் என்ன செய்வீர் என்று கேட்டார்கள்.

நான் முன்பு கூறியது போன்று, இன்றைய காலத்தில் பாகிஸ்தானில் இருக்கும் மவ்லவிகளும் அவர்களின் கூட்டாளிகளும் சொர்க்கம் செல்லக்கூடிய விஷயங்களை பேசுகிறார்கள். அஹ்மதிகளை கொன்றால் சொர்க்கம் செல்லலாம் என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்களின் இந்த செயல்கள் அல்லாஹ்வுடைய தண்டனைக்கான காரணமாக ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிவதில்லை. என்றைக்காவது ஒருநாள் அல்லாஹ்வுடைய பிடி அவர்கள் மீது வரும்.

**பிறகு, இன்னொரு போர்ப் படை பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. ஏமன் மற்றும் ஜபாரை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களின் போர்ப்படையாகும்.** இந்த போர் நடவடிக்கை ஷவ்வால் மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு நிகழ்ந்ததாகும். கத்ஃபானுடைய ஒரு பிரிவு பெருமானார் (ஸல்) அவர்களுக்கெதிராக ஒன்று கூடுவதாக அன்னாருக்கு தகவல் கிடைத்தது. உயைனா பின் ஹிஸ்ன் என்பவன் அன்னாருக்கு எதிராக அம்மக்களுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி அளித்திருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம் ஆலோசனை கேட்ட பிறகு ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களுடன் 300 சஹாபிகளை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் ஜபார் எனுமிடத்தை அடைந்த போது கத்ஃபானை சார்ந்த அம்மக்கள் அச்செய்தியை கேட்டு தமது செல்வத்தையும் கால்நடைகளையும் விட்டுவிட்டு தமது குடியிருப்பை விட்டு உயரமான இடங்களில் ஏறி ஒளிந்து கொண்டார்கள். அவர்களில் இரண்டு பேர் மட்டும்தான் அகப்பட்டார்கள். அவ்விருவரும் கைது செய்யப்பட்டார்கள். ஆடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் ஒட்டகங்கள் ஆகியவற்றை சஹாபிகள் கைப்பற்றிக் கொண்டு கைதிகளை அழைத்துக்கொண்டு மதீனாவுக்கு புறப்பட்டார்கள். அங்கு அந்த இரு கைதிகளும் முஸ்லிமாக ஆனார்கள். ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இருவரையும் தம் பகுதிக்கு செல்ல அனுமதி வழங்கினார்கள்.

**உம்ரத்துல் கஸாவை பற்றிய விபரம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது;** துல் கஅதா மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு அதாவது கி.பி 629 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பெருமானார் (ஸல்) அவர்கள் உம்ரத்துல் கஸாவுக்காக புறப்பட்டார்கள். இதற்கு முந்தைய வருடம் இதே மாதத்தில்தான் மக்கத்து முஷ்ரிக்கள் உம்ரா செல்ல விடாமல் அன்னாரை தடுத்தார்கள். ஹுதைபியா என்ற இடம்வரை சென்ற பிறகு அன்னார் திரும்பி வந்தார்கள். ஆகவே அந்த உம்ராவை நிறைவேற்றுவதற்காக அன்னார் புறப்பட்டுச் சென்றார்கள்.

அதன் விவரம் இவ்வாறு வருகிறது; அந்த உம்ராவில் அன்னாருடன் 2000 சஹாபிகள் இருந்தார்கள். குர்பானிக்காக 60 ஒட்டகங்கள் இருந்தன. சஹாபிகளின் பெரும்

கூட்டத்துடன் தல்பியா ஓதியவாறு ஹரமை நோக்கி அன்னார் முன்னேறினார்கள். குர்பானியுடைய கால்நடைகளை ஸித்தவா என்ற இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அன்னார் தம்முடைய பெண் ஒட்டகமான கஸ்வாவில் பயணம் செய்தார்கள். மஸ்ஜிது ஹராமை அடைந்த பிறகு அன்னார் தம்முடைய போர்வையை எவ்வாறு போர்த்திக் கொண்டார்கள் என்றால் அன்னாருடைய வலது தோல்பட்டை வெளியே தெரிந்தது. எவர் இந்த நிராகரிப்பாளர்களுக்கு முன்னால் தம் ஆற்றலை வெளிப்படுத்துகிறாரோ அவர் மீது இறைவன் தன் அருளை இறக்குவானாக என்று அன்னார் கூறினார்கள். பிறகு அன்னார் தம் சஹாபிகளுடன் தவாஃப்புடைய முதல் மூன்று சுற்றுகளை தோள்பட்டைகளை அசைத்தவாறு நெஞ்சை நன்கு நிமிர்த்தியவாறு தவாஃப் செய்தார்கள்.

**இச்சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மைமூனா பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்களுடன் திருமணம் புரிந்த குறிப்பும் காணக்கிடைக்கிறது.** அன்னார் மக்காவில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். நான்காவது நாள் மக்காவாசிகளின் வேண்டுகோளுக்கிணங்க அன்னார் தம் அனைத்து சஹாபிகளையும் உடனடியாக அழைத்துக் கொண்டு மக்காவில் இருந்து புறப்பட்டார்கள்.

**இந்த பயணத்தில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகளுடைய சம்பவமும் காணக் கிடைக்கிறது.** அன்னார் மக்காவிலிருந்து புறப்பட்டபோது ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகள் அன்னாரைப் பார்த்து குரல் கொடுத்தவாறு வந்தார்கள். அதைக் கண்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகளை தம்முடன் அழைத்து வருவதற்காக சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அவர்களுடைய கையைப் பிடித்தவாறு ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம், இவர்களை உங்களுடன் அழைத்து வாருங்கள் என்றார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள், அவர்களை தம்முடன் அழைத்து வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் ஸைது (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) ஆகியோருக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்விஷயத்திற்காக தீர்ப்பு வழங்கும்போது சிற்றன்னைக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினார்கள். சிற்றன்னை என்பவள் தாயின் அந்தஸ்தில் உள்ளவராவார் என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அன்னாரிடம், தாங்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகளுடன் திருமணம் செய்ய மாட்டீர்களா என்று கேட்ட போது, அவள் என்னுடைய பால்குடி சகோதரருடைய மகள் ஆவார். இந்த பந்தத்தில் திருமணம் செய்ய இயலாது என்று அன்னார் கூறினார்கள். அன்னார் துல் ஹஜ்ஜா மாதத்தில் மதீனாவுக்கு திரும்பி வந்தார்கள்.

**பனூ சுலைமை நோக்கி அனுப்பப்பட்ட அக்ரம் பின் அபி அவ்ஜா என்ற போர்ப் படையைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது.** இந்த போர் நடவடிக்கை துல்ஹஜ்ஜா மாதம் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அக்ரம் பின் அபி அவ்ஜா (ரலி) அவர்களை 50 நபர்களுடன் பனூ சுலைமை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அம்மக்கள் மதீனாவுக்கு அருகில் குடியிருந்தார்கள். பனூ சுலைமுடைய ஒற்றன் ஒருவன் ஹஸ்ரத் அக்ரம் பின் அபி அவ்ஜா (ரலி) அவர்களுடன் இருந்தான். அவன் முன்னால் சென்று தம் சமுதாயத்தினரை எச்சரித்து விட்டான். ஆகவே, அவர்கள் ஒரு பெரும் படையை ஒன்று திரட்டி விட்டார்கள். ஹஸ்ரத் அக்ரம் பின் அபி அவ்ஜா (ரலி) அவர்கள் அம்மக்களை சென்றடைந்தபோது பனூ சுலைம் அவர்களுக்கு எதிராக ஆயத்தமாக இருந்தார்கள். அவர்கள் அம்மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்தார்கள். ஆனால், அம்மக்களோ அதை மறுத்தார்கள். அதற்கு பிறகு இரண்டு புறத்திலிருந்தும் கொஞ்சம் நேரம்வரை அம்புகள் எறியப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த நேரத்தில் பனூ சுலைமுக்கு மேற்கொண்டும் உதவிப்படை வந்து சேர்ந்தது. அவர்கள் முஸ்லிம்களை நாலாபுரமும் சூழ்ந்து கொண்டார்கள். முஸ்லிம்கள் கடுமையாக போரிட்டார்கள். எந்த அளவுக்கென்றால், முஸ்லிம்களில் பெரும்பாலார் ஷுஹீதாகி

விட்டார்கள். ஹஸ்ரத் அக்ரம் பின் அபி அவ்ஜா (ரலி) அவர்களும் கடுமையாக காயம் அடைந்து கொல்லப்பட்டவர்களுடன் விழுந்து விட்டார்கள். பிறகு அவர்கள் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஸஃபர் 1 ஆம் தேதி பெருமானார் (ஸல்) அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

**பிறகு கதீதை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் காலிப் பின் அப்துல்லாஹ் லைஸீ (ரலி) அவர்களின் போர்ப்படையைப் பற்றிய குறிப்பு காணக்கிடைக்கிறது.** பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களை ஸஃபர் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு பனூ லைஸ் உடைய கிளைக் கோத்திரமானது பனூ முலவ்விஹ் ஐ நோக்கி 15 நபர்களுடன் அனுப்பி வைத்தார்கள். அம்மக்கள் கதீத் எனுமிடத்தில் வசித்து வந்தார்கள். அந்த போர் நடவடிக்கையில் முஸ்லிம்களின் முழக்கம், அல்லாஹ்வே! எதிரியை கொல்வாயாக என்பதாக இருந்தது.

***இந்த போர் நடவடிக்கையின் சுருக்கமான விபரத்தை எடுத்துரைத்த பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:*** இந்த சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. (இனி வரும் காலத்தில் எடுத்துக் கூறப்படும்). இப்போது நான் பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆவுக்காக கூறிக் கொள்கிறேன். நான் ஏற்கனவே கூறியது போன்று, ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இருநூறு முறை ஓதுங்கள்.

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ ۔ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّ اٰلِ مُحَمَّدٍ

தற்போது இதன் பக்கம் எந்த அளவு கவனம் செலுத்த முடியுமோ அந்த அளவு கவனம் செலுத்துங்கள். நாம் துஆவுடைய உரிமையை நிறைவேற்றியவாறு துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துவோம் என்றால் வெற்றி கிடைக்கும். எந்த அளவு கவனம் செலுத்த வேண்டுமோ அந்த அளவு கவனம் செலுத்தப்படாமல் உள்ளது. 'வெறும் துஆக்களினால் ஒன்றும் ஆகப்போவதில்லை; வேறு ஏதேனும் நாம் செய்ய வேண்டும்' என்று சிலர் எனக்கு கடிதமும் எழுதுகிறார்கள். அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும்? நம்முடைய ஆயுதமோ துஆ மட்டுமே ஆகும். இதை குறித்து முன்பும் நான் பலமுறை கூறியிருக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மேற்கோள்களை எடுத்துரைத்திருக்கிறேன். துஆக்களினால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்று நினைப்பது மிகவும் தவறான சிந்தனையாகும். எவ்வாறிருப்பினும், துஆக்கள் மட்டும்தான் நம்முடைய வெற்றிக்கான தீர்வாகும். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! துஆக்களினால் ஒன்றும் ஆகப் போவதில்லை என்று கூறி அதற்கான உரிமையை செலுத்தவில்லை என்றால் இது அல்லாஹ்விடம் செய்யக்கூடிய தவறான முறையீடு ஆகும். ஆகவே, இதற்காக நாம் பாவமன்னிப்பும் கேட்க வேண்டும். இன்று கராச்சியில் ஒரு சம்பவமும் நிகழ்ந்துள்ளது. பயங்கரவாதிகள் இஸ்லாத்தின் பெயரால் - இவர்கள் பயங்கரவாதிகள்தான் - நம் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். அஹ்மதி ஒருவரை ஷஹீதும் ஆக்கி இருக்கிறார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அதனுடைய முழு விவரமும் தற்போது கிடைக்கவில்லை. விபரங்கள் கிடைக்கும்போது நான் அதை எடுத்துக் கூறுவேன் இன்ஷா அல்லாஹ்! அந்த அநீதியாளர்களைப் பிடிப்பதற்கான விரைவான ஏற்பாட்டையும் அல்லாஹ் செய்வானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)